Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

தனிப்பிரதி ரூ. 5/-
Reg. No. KKI/63/2015-2017

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 63 கர்த்தாவே, ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன் சங்.130:1 செப்டம்பர் 2017 No.9

முழுமையாக தேவனுக்கு அளிக்கப்பட்ட ஒரு இருதயம்

A heart wholly given to God

Charles H.Spurgeon

மார்க்க நெறிப்படி ஆத்துமா நல்ல அனலுடையதாக இருக்க வேண்டும். புதிய எருசலேம் கட்டப் பட்டுள்ள குன்றின் மீது ஏற எல்லா பாரங்களையும் விட்டு தங்களை அந்த தெய்வீக உயர்வுக்கு ஏறிச்செல்ல முற்றிலும் அர்ப்பணிக்க முழங்காலூன்றி தேவனோடு தொடர்பு கொள்ள வேண்டும். எந்தப் பணியிலும் கடின உழைப்பும் விடா முயற்சியும் வேண்டும். சோம்பலின் ஜெபம் கூடாது. அரைகுறையான துதி தேவனை அவமானப்படுத்துவதாகும். முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் செய்யப் படாத யாவும் பாவமாகும். நமது மிக உசிதமானவைகளைப் பயன்படுத்தாமல் எப்படி தேவனைப் பிரியப்படுத்த முடியும். "நீ. . . . .வெது வெதுப்பாயிருக்கிறபடியினால் நான் உன்னை என் வாயிலிருந்து வாந்திப் பண்ணிப் போடுவேன்" என்பது வெளி.3:16-ல் நாம் காணும் எச்சரிப்பின் வசனம். இந்தக் கடின எச்சரிப்பு கடின நெஞ்சமுடைய புரட்சியாளனுக்கு அல்ல ஒழுங்காக தேவனை சேவிக்கும் சீஷனுக்கு அளிக்கப்படுகிறது. அந்த சேவையில் உற்சாகமில்லை. முழு மனதை தேவன் நேசிக்கிறார். அரைகுறை மனதை அவர் வெறுக்கிறார். முழு மனதோடும் பெலத்தோடும் ஓடுகிறவர்கள் மட்டுமே பந்தயப் பொருளைப் பெற முடியும். ஆனால் இருமனதுள்ளவன் கால் ஊனமுற்றவனாயிருப்பதால் அவன் வெற்றியை எதிர்பார்க்க முடியாது. உம்மிலே மட்டுமே என் ஆத்துமா களிகூருவதால் என் இருதயத்தை முற்றிலுமாக உமக்கு அளித்து உமது சேவைக்காகவே அதனை பயன்படுத்தவும், பயன்படுத்தப் படவும் கொடுப்பேனாக.

கிறிஸ்து நம்மை மணவாட்டியாக்கியிருந்தால் நாம் முற்றிலும் அவருக்குச் சொந்தமல்லவா! அவரை மட்டுமல்லவா நேசிக்க வேண்டும்! இன்னொன்றை நேசிப்பது தவறல்லவா! இதுபோலவே நமது ஆண்டவரோடுள்ள உறவு உண்மையுள்ளதாயிருக்க வேண்டும். இதைத் தவறாக மாற்றும் எந்த ஆசையும், பாசமும் இருக்கவே கூடாது. இத்தகைய மகிமையான அன்பு நமது ஆத்துமாவை முழுவதும் நிரப்ப வேண்டும். நமது ஆண்டவரிடமிருந்து நம்மை திருப்புவதற்கான ஏதுக்களை வரவிடாமல் வாசல்களை பூட்டி விடுங்கள். நமது இருதயம் முற்றிலும் அவருடையதாகவே இருக்க வேண்டும். அப்போது சங்கீதக்காரனோடு சேர்ந்து 'தேவனே என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது' சங்.108:1 என்று சொல்லும் கிருபையைக் கேளுங்கள். பின்பு பாடிக் கீர்த்தனம் பண்ணுவீர்கள்.

நடையில் உறுதி

இருசிந்தையுள்ள வாழ்க்கை தனிப்பட்ட உண்மையான உறுதி நிலையைப் பெற முடியாது. எனக்கு ஒரு இருதயம் உண்டு, அது என் ஆண்டவருக்குச் சொந்தம் - எனக்கு ஒரு வழி உண்டு அது ஆண்டவருக்குக் கீழ்ப்படிவது என்று நான் அறிந்திருந்தால், நான் அவருடையவன் என்று நிச்சயமாகக் கூறலாம். பரிசுத்தம் நமது விசுவாசத்தை நிரூபிக்கிறது. நமது விசுவாசம் நமது இரட்சிப்பை உறுதிப் படுத்துகிறது. இரட்சிப்பு சந்தோஷத்தையும், சமாதானத்தையும், உறுதியையும் பிறப்பிக்கிறது. "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால் அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்" 1யோ.2:3.

கொள்கையில் உறுதி

ஆண்டவர் நமது இருதயத்தோடு நெருக்கமாக இருக்க வேண்டும். நமது ஆத்துமாவில் தேவ பயம் வேண்டும். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். விடாமுயற்சிக்கு இதுவே பாதுகாவல்.

தேவன் நமக்கு உண்மையான ஆவிக்குரிய தேவபயத்தைத் தரும் போது எல்லா சோதனைகளிலும் நாம் உறுதியாக நிற்க முடியும். வெளிப்படையான மார்க்கம் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் தேவபயம் எல்லா சூழ்நிலைகளிலும் நமக்கு உதவியாக அமையும். மனந்திரும்பின அநேகருடைய வாழ்வில் சிறிது காலத்திலேயே எழுப்புதல் மறைந்து விடுகிறது. ஆனால் தேவன் நமக்கு அவரை நேசிக்கவும், அவருக்குக் கீழ்ப்படியவும், பயப்படவும் ஒரு இருதயத்தைத் தந்திருந்தால் நாம் நமது உள்ளத்தின் எண்ணங்களை சார்ந்து வாழமாட்டோம். சாலமான்டர் என்ற பிராணிகளைப்போல நெருப்பிலும், சீல்களைப்போல பனிப்பிரதேசத்திலும் வாழ முடியும். ஏனெனில் நமக்குள்ளே நீரூற்று சுரந்து கொண்டேயிருப்பதால் சடங்காசாரங்களை சார்ந்து வாழ விரும்ப மாட்டோம். நாம் அடிமைகள் மேலல்ல எஜமான்மேல் நம்பிக்கையுடன் வாழுகிறோம். தேவ ஆவியானவர் நம்மை விட்டு விலகுவதில்லை. நாம் எப்போதும் அவருக்கு பயப்படும் பயத்தை நமக்கு என்றென்றைக்கும் அருளியிருக்கிறார்..

துன்பங்கள் வரும்போது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும், தெரிந்து கொள்ளப்படாத வர்களையும் அறிந்து கொள்ள முடியும். ஏனெனில் பதரைப் போன்றவர்கள் பறக்கடிக்கப்பட்டுப் போவார்கள். ஆனால் உத்தமர்கள் நிலைநின்று சுத்திகரிக்கப்படுவார்கள். மனித கணிப்பைப் பாராமல் தேவபயமுள்ளவர்கள் ஒரே சிந்தையோடு ஒரே வழியில் நிலைத்து நின்று ஆண்டவருக்கு என்றென்றும் பயப்படக் கூடும்.

பின்பு ஒருபடி அதிகமான சோதனை வரலாம். அது செழிப்பிற்கான சோதனை. ஒருவன் ஐசுவரிய வானாகி வாழ்வில் மேம்படும் போது சமுதாயத்தில் உயர்வு பெறுகிறான். அவன் உத்தம கிறிஸ்தவனாயிராவிட்டால் அவன் கர்த்தரை விட்டு விலகலாம். ஆனால் அவன் உத்தமமான ராஜ்யத்தின் சுதந்தரவாளியானால் அவன் கர்த்தருக்குப் பயந்து, தன்னை முற்றிலும் அவருக்காகவே அர்ப்பணிப்பான். தேவனுக்குத் தன் இருதயத்தை முற்றிலுமாக அர்ப்பணித்த ஒருவன் எல்லாச் சூழல்களிலும் உறுதியாக நிற்பான்.

ஏழ்மையும் தேவனுடைய வீட்டில் கூடிவராதபடி அனேகர் தடைபடுவதற்குக் காரணமாயிருக்கிறது. அவர்கள் தங்களுக்குப் போதுமான ஆடைகளில்லாதபடியால் ஆலயம் செல்வதில்லை என்கிறார்கள். இது தவறான சாக்குப்போக்கு. அவர்களுடைய இருதயமே ஆலயம் செல்லத் தடையாயிருக்கிறது. தேவபயமுள்ள மனிதன் தனது பெருமையை விட்டு, கிறிஸ்துவை கந்தையிலும் பின்பற்றுவான். அவன் அப்பமும், தண்ணீருமில்லாத பஞ்ச காலத்தை சகித்தாலும் தேவவசனம் பெற்றுக் கொள்ள முடியாத சூழலை சகிக்கமாட்டான். அவனுடைய ஆத்துமா போஷிக்கப் படும்படியாக எங்கெல்லாம் தேவனுடைய ஜீவ அப்பம் பகிர்ந்தளிக்கப்படு

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955-1999)

முகவரி: வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் 629 001
Mobile: 95432 21008 e.mail:varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்

உபாகமம். *31:8.*

வாசகருக்கு என் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

செம்டம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும் தாழ்மையுடனும் துதிக்கிறேன். *2017*-ம் ஆண்டு நிறைவு பெற இன்னமும் **மூன்றே மூன்று மாதங்கள்** மாத்திரமே உள்ளது. இந்த எச்சரிக்கை, வாசகரின் காதுகளில் தொனிக்க வேண்டும் என்று அடியேன் வாஞ்சிக்கிறேன், ஜெபிக்கிறேன்.

"அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று: கலிலேயரான மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" அப்.*1:10,11.*

இந்த வார்த்தைகளை விசுவாசித்த ஆதிகிறிஸ்தவர்கள், ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, கர்த்தருக்கு ஸ்தோத்திரம் (Praise the LORD) என்று கூறாமல், "**மாரநாதா**" **இயேசு வருகிறார்** என்று கூறினார்கள், அல்லேலூயா.

நான் சிறுவனாய் இருக்கும்போது நடைபெறும் எல்லா கன்வென்ஷன் கூட்டங்களிலும் இறுதி நாளில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் "**இரண்டாம் வருகை**" பற்றியே பிரசங்கித்தார்கள். வரவர அந்த சத்தம் வெகுவாய் குறைந்து போயிற்று. ஜனங்கள் நோவாவின் நாட்களைப் போல நடக்கிறார்கள். "எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண் கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; **அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்**" *மத்.24:38,39.*

"லோத்தினுடைய நாட்களில் நடந்தது போலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப் போட்டது. **மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்**" *லூக்கா 17:28-30.*

"மின்னல் வானத்தின் ஒரு திசையில் தோன்றி மறுதிசை வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார். அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டு பேரில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான். திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள். வயலிலிருக்கிற இரண்டு பேரில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" *லூக்கா 17:24, 34-36.*

உங்கள் ஆண்டவர் இன்ன நாளிலேயே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள் *மத்.24:42.*

அன்பானவர்களே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த வார்த்தைகளை சொல்லி ஏறக்குறைய **2000** ஆண்டுகள் ஆகிவிட்டது; மாத்திரமல்ல, இவைகள் நிறைவேறும் காலத்தை நாம் எட்டிவிட்டோம். ஒரு கிறிஸ்தவ மாத பத்திரிக்கையில் வெளியான செய்தியை கீழே அச்சிடுகிறேன்:

2000 வருடங்களுக்கு முன் வேதாகமத்தில் சொல்லப்பட்டது இன்று நடக்கிறது.

கரன்ஸி நோட்டுக்களை (ரூபாய்) கையில் எடுத்துச் செல்வதால் ஏற்படும் பிரச்சனைகளுக்குப் பரிகாரமாக அறிமுகமானதுதான் கிரடிட் கார்டு (Credit Card). இந்த எலக்ட்ரானிக் அட்டைகளைப் பயன்படுத்துவதிலும் பல இடையூறுகள் உருவாகின.

கிரடிட் கார்டுகளால் என்ன பிரச்சனைகள்?

1. தொலைந்து விடக்கூடியது.
2. திருடப்பட வழியுண்டு.
3. உடையக் கூடியது.
4. தவறானவர்கள் பயன்படுத்தும் ஆபத்து.
5. அவ்வப்போது புதுப்பிக்க வேண்டியுள்ளது.

இதற்கு மாற்று வழி Bio Chip *(உடலில் பதிக்க வைத்தல்)*

மைக்ரோ சிப்ஸ் (Micro Chip) என்ற மிக சிறிய கருவியில் ஒருவருடைய சகல விபரங்களையும் பதிவு செய்து விடுதல், டிரான்ஸ்பாண்டர் (Transponder) என்ற நுண்ணிய கருவியின்

(7-ம் பக்கம் பார்க்க)

எழுப்புதலுக்காக இதய தேறல் 2018

இயேசு கிறிஸ்துவுக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	27-01-2018 4-வது சனி	E.W.M. Prayer House புதுக்கோட்டை, பொள்ளாச்சி
பிப்ரவரி	17-02-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை கோயம்பத்தூர்
மார்ச்	17-03-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை அரியா குப்பம்,பாண்டிச்சேரி
ஏப்ரல்		ஜீவ ஊற்று ஊழியங்கள் பெரம்பலூர்
மே		
ஜூன்		
ஜூலை	21-07-2018 3-வது சனி	கன்மலை ஆராதனை சபை கடலூர்
ஆகஸ்ட்		
செப்டம்பர்		
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

வருட சந்தா ரூ.100.00

சந்தா, காணிக்கை, கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்

நியுபோர்ட் தெரு, நாகர்கோவில்-629 001.

VARUKAYIN THOOTHAN

Newport Street, Nagercoil-629 001.

Mobile: 95432 21008

வங்கி கணக்கு எண்

VARUKAYIN THOOTHAN
A/c. No.:431521036
Indian Bank,
W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்.

email :
varukayinthoothan@hotmail.com

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறதோ, அங்கெல்லாம் அவனைக் காணலாம். யோபினுடைய சகல வசதிகளும் பறிக்கப்பட்ட போதும் அவன் தனது உத்தமத்தை விட்டு விலக வில்லை.

முதிர்வயதிலிருப்பவர்களில் சிலர் கிருபையில் வளருவதை எண்ணி களிகூருகிறேன். உங்கள் காதுகள் மந்த மடைந்தாலும் கர்த்தருடைய சத்தத்தை நீங்கள் கேட்கிறீர்கள். உங்கள் கண் பார்வை மங்கலடைந்தாலும் அவரு டைய வார்த்தையின் அழகைக் காண முடிகிறது. உங்கள் கரங்கள் கால்கள் நடுங்கினாலும் அவருடைய பாதைகளில் நடக்கிறீர்கள். வாலிப வயதில் ஒரு வனுக்கு தேவன் ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கொடுத்திருந்தால் அவன் பலவீனங்கள் வரும் நாட்களில் அவன் தேவனை ஒரு போதும் விட்டு விலகுவதில்லை. அவன் முதிர் வயதிலும் கனிதந்து புஷ்டியும் பசுமையுமாயிருப் பார்கள். அதன் மூலம் தேவன் உத்தமர் என்று விளங்கப்பண்ணுவார்கள். நமது ஆத்துமா முற்றிலும் அவருக்குச் சொந்த மாயிருந்தால் நாம் கிறிஸ்துவை விட்டு ஒரு போதும் பின்வாங்க மாட்டோம். "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" ரோ.8:36.

ஆண்டவர் தமது அன்பின் கயிறு களால் நம்மைக் கட்டி வைத்திருக் கிறார். நமது பெற்றோரையோ, நமது ஜீவனையோ கூட நாம் இழக்க வேண்டி வந்தாலும் நம்மைப் பாதாளத்திற்கு விலக்கி மீட்கும்படி தமது இரத்தத்தால் விலைக்குக் கொண்ட ஆண்டவரை நாம் விட்டு விட முடியாது. நாம் பரம ராஜ்யத்திற்காக ஆயத்தப்பட்டவர்கள். யார் நம்மை அதிலிருந்து விலக்க முடியும். நாம் அம்புகளைப் போல தேவனுடைய வில்லிலிருந்து விடப் பட்டவர்கள். நாம் வேகமாக முன்னேறி அவருடைய குறியாகிய நித்திய ஆசீர் வாதத்தை எட்ட வேண்டாமா? நித்திய காலமாக நிலைக்கும் தேவபயம் நம்மில் காணப்படுவது எவ்வளவு பெரிய கிருபை!

தனிப்பட்ட ஆசீர்வாதம்

முழுமனதோடு கிறிஸ்தவர் களாக வாழுகிறவர்கள் மட்டுமே மிகவும் சந்தோஷமான கிறிஸ்தவர்கள். இருதயமும் வாழ்வும் பிரிவுபடும்போது சந்தோஷம் பிளவின் வழியாக கசிந்து விடும். சமாதானத்தை அனுபவிக்க நாம் நீதியை ஒழுங்காக நாட வேண்டும். மார்க்கத்தின் இனிமையை அறிய அதின் ஆழத்தை அறிய வேண்டும். மேலாம்பர மான தேவபயத்தால் திருப்தியடை கிறவர்கள் தேவனோடுள்ள ஐக்கியத் தின் ஆழங்களிலுள்ள நன்மைகளால் மகிழ்ச்சியடைய முடியாது. **ஜீவ நதியில் குதியுங்கள். அதின் வெள்ளங்களுக்குள் உங்கள் ஆத்துமா, ஆவி ஆகியவை மூழ்கட்டும். அப்போது நீங்கள் சொல்ல முடியாத ஆனந்தத்தால் அதில் நீச்சல டிப்பீர்கள்.** லௌகீகமாகிய கடற்கரையின் பார்வையை மறந்து விட்டால், ஆழங்களி லுள்ள தேவனுடைய அதிசயங்களைக் காண முடியும். தேவனிடமுள்ள ஆழ்ந்த பயபக்தியால் அரிய முத்தாகிய 'திருப்தி யைப் பெறுவீர்கள். "நப்தலி கர்த்தருடைய தயவினாலே திருப்தியடைந்து, அவரு டைய ஆசீர்வாதத்தினாலே நிறைந் திருப்பான்" உபா.33:23. இனிமையான திருப்தி அரைகுறை இருதயத்தில் தங்குவதில்லை.

தேவனைப்பற்றிய மிகத் தெளி வான பார்வையுடையவர்கள் இருதயம் பிளவுபடாதவர்களும், இருதயத்தில் சுத்தமுள்ளவர்களுமாயிருப்பார்கள். **பரலோகத்திற்குரிய காரியங்களை மட்டுமே சிந்திக்கிறவர்கள் இவ்வுலகிலும் பரலோக சந்தோ ஷத்தை அனுபவிக்கக் கூடும்.** முழுமையான அர்ப்பணிப்பும் ஆழமான அன்பும் ஆசீர்வாதமான வாழ்வைக் கொண்டு வரும். உணவு உண்ணாமல் பட்டினி யிருப்பதால் உடல் பலவீனமடைந்து, வியாதிகளுக்கு இடமளிக்கிறது. ஆனால் கிறிஸ்துவை உட்கொள்ளுகிறவர்கள், அவர்கள் பரலோக அப்பத்தால் போஷிக் கப்படுவதால் பெலனடைந்து பலவித மான தீமைகளிலிருந்து பாதுகாக்கப்படு கிறார்கள். தூய ஆவியாகிய தேவனே! நான் விரும்புவது போல கிறிஸ்துவின் பணியாளர்களிடம் நான் பேச முடியாது. ஆனால் நீர் அவர்களை அசைக்க முடியும். எனவே அவர்களது நன்மைக்காக அவர் கள் தங்களை முற்றிலும் தேவனுக்கு அர்ப் பணிக்கும் ஒரு ஆவலைத் தருவீராக.

முழங்காலளவு அனுபவத்தில் மட்டும் சென்று ஆழத்திற்குச் செல்ல விரும்பாதவர்களைக் குறித்து நான் துக்கப்படுகிறேன். நீங்கள் மெதுவாகக் கடற்கரைக்கு மறுபடியும் வாருங்கள். தண்ணீருக்குள் குதியுங்கள். பலத்த நீரோட்டத்தால் நீங்கள் இழுக்கப்பட்டு நித்திய அன்பால் உங்களை இழந்து பரலோகத்தை அடைவீர்கள். நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் முழுமனதான, நிலையான, வைராக்கியமான விடா முயற் சியுடைய கிறிஸ்தவர்களாக மாற வேண்டுமென உங்களை வாழ்த்துகிறேன்.

இருதயத்தின் மேல் தேவனுடைய தொடுதல்

The touch of God upon the heart

Rich Carmicheal

நமது இருதயம் தேவனுடைய பார்வையில் மிக முக்கியமானது. இருதயம் ஜீவ ஊற்று புறப்படுமிடம் நீதி.4:23. அது எப்படிப்பட்டதாக இருக் கிறதோ அதன் அடிப்படையில் நமது வாழ்வு முழுமையாக பாதிக்கப்படும். (மத்.12:34-35,15:18-20) "மனுஷர் பார்க் கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத் தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத் தைப் பார்க்கிறார்" (1சாமு.16:7).

எரே.17:9-ன்படி "எல்லாவற் றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள் ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?"

மனித இருதயம் எப்படியெல்லாமிருக்கிறது?

நீதி.16:5	–	மனமேட்டிமையுள்ள இருதயம்
சங்.81:12	–	கடின இருதயம்
எபி.3:8	–	முரட்டாட்டமான இருதயம்
யாக்.3:14	–	கசப்பும் வைராக்கியமுமான இருதயம்
மத்.15:8	–	தேவனை விட்டு தூரமாக விலகியிருக்கும் இருதயம்
எசேக்.6:9	–	சோரம் போகிற இருதயம்
எபி.3:10	–	வழுவிப்போகிற இருதயம்
ரோமர் 1:21	–	இருளடைந்த இருதயம்
நீதி.14:14	–	பின்வாங்கும் இருதயம்
ரோமர் 2:5	–	குணப்படாத இருதயம்

மேலும் இவ்வாறாகவும் இருதயம் காணப்படலாம்.

சங்.109:22	–	குத்துண்ட இருதயம்
நீதி.13:12	–	இளைப்படைந்த இருதயம்
லூக்.21:34	–	பாரமடைந்த இருதயம்
எண்.32:7	–	திடனற்றுப் போகும் இருதயம்
சங்.143:4	–	சோர்ந்து போகிற இருதயம்
நீதி.12:25	–	கவலையுள்ள இருதயம்
சங்.55:4	–	வியாகுலமடையும் இருதயம்
சங்.61:2	–	தொய்யும் இருதயம்
சங்.25:17;		
யோ.17:27	–	கலங்கிய இருதயம்
1சாமு.1:15	–	கிலேசம் நிறைந்த இருதயம்
சங்.38:8	–	கொந்தளிக்கும் இருதயம்
நீதி.14:10	–	கசப்பு நிறைந்த இருதயம்
சங்.51	–	குற்றம் நிறைந்த இருதயம்

மேற்கூறப்பட்ட வகையான இருதயங்களில் சில தேவனால் தொடப் பட வேண்டியவைகளாயிருக்கின்றன. ஆண்டவர் நமது இருதயங்கள் ஆவிக் குரிய ஜீவனால் நிரப்பப்பட்டு, வழிந் தோடுவதாக இருக்க விரும்புகிறார். நமது வாழ்வின் எப்பகுதியும் அவரால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, நமது இருதயம் கவலை யுள்ளதாயிருந்தால் அதனை சமாதானத் தால் நிரப்ப அவர் விரும்புகிறார். அது அதைரியமடைந்திருந்தால் சந்தோஷத் தால் நிரப்பவும், வழிவிலகியிருந்தால் தமக்கு நேராகத் திருப்பவும் ஆவலுடனி ருக்கிறார். தவறு செய்திருந்தால் அதைக் கழுகி பாவத்திலிருந்து விடுதலை தருகி றார். அவர் நமது இருதயங்களைக் குறித்த அக்கரையோடிருக்கிறார். எந்த இருதயத்தையும் முழுமைப்படுத்தி தமது ஜீவன் அதில் வழிந்து ஓடச் செய்கிறார்.

நம் இருதயத்தில் தேவனுடைய பணி

தேவன் நமக்கு ஒரு நவமான இருதயத்தை அருளுகிறார் எசேக்.36:26. நாம் மறுபடியும் பிறக்கும் போது அது நமக்கு அருளப்படுகிறது. கல்லான நமது இருதயத்தை எடுத்து விட்டு பதிலாக சதையான ஒரு இருதயத்தை அவர் தரு கிறார். அவர் தமது "பிரமாணங்களை அவர்களுடைய மனதில் வைத்து அவர் களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுகிறார்" எபி.8:10. அதோடு சங்.31: 24-ன்படி நமது இருதயங்களை அவர்

ஸ்திரப்படுத்துவார். அவர் நமது இருதயங்களை எழுப்புதலடையச் செய்து, (ஏசா.57:15) நமது இருதயங்களைத் தேற்றி எல்லா நல்வசனத்திலும், நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவார் 2தெச.2:17.

அவர் நம்மிடம் கேட்கும்போது தாழ்மையோடு நமது முழு இருதயத்தையும் இருக்கிறபடியே நம்பிக்கையுடன் அவரிடம் கொண்டு வருகிறோமா? அவர் தமக்குப் பிரியமானதை நடப்பிக்க நமது இருதயங்களில் பிரவேசிக்க விரும்புகிறார். எரே.29:13- ன் படி அவரை முழு இருதயத்தோடும் தேடினால் அவரைக் கண்டு பிடிக்க முடியும். அவர் நமது இருதயங்களில் கிரியை செய்ய எவ்வளவாக வாஞ்சிக்கிறோமோ அவ்வளவாக அவரது கிருபையும், வல்லமையும் நம்மில் கிரியை செய்யும். அவர் நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்தை புறக்கணியாதவர் சங்.51:17, சங்.119:58, 25:16-17, 139:23-24 ஆகிய வசனங்களைப் படித்துப் பாருங்கள்.

சங்.69:32-ன் படி தேவனைத் தேடுகிறவர்களின் இருதயம் வாழும். வேறுவிதமாகக் கூறினால் உங்கள் இருதயம் எழுப்புதலடைந்து, உற்சாகப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்படும். தேவன் நம்முடைய இருதயங்களில் கிரியை செய்யும்படி நாம் அனுமதித்தால் அவர் என்னென்ன செய்வார்!

1. தேவன் தம்முடைய அன்பினால் நம்முடைய இருதயங்களை நிரப்புவார்: ரோமர்5:5-ன்படி அவர் தூய ஆவியானவரால் தமது அன்பை நமது உள்ளங்களில் ஊற்றுகிறார். அவரது அன்பு நம் இருதயங்களை ஆட்கொள்ளும் போது நாம் அவரை முழுமனதோடு சேவிக்க ஆரம்பித்து விடுகிறோம். பிறரையும் நேசிக்க முன் வருகிறோம். பரிசுத்த இருதயத்தோடே ஒருவரையொருவர் நேசிக்கவும் ஏதுவாகிறது. *(1பேதுரு 1:22).*

2. தேவன் தமது சந்தோஷத்தால் நமது இருதயங்களை நிரப்புகிறார்: *சங்.4:7;28:7; 105:3* ஆகிய வசனங்களைப் படிக்க.

3. தேவன் தமது சமாதானத்தால் நமது இருதயங்களை நிரப்புகிறார்: கொலோ.*3:15, பிலி.4:6-7* வசனங்கள்.

4. தேவன் தமது பெலத்தால் நமது இருதயங்களை நிரப்புகிறார்: *சங்.31:24;73:26; 2நாளா.16:9.*

5. தேவன் நமது இருதயங்களை சுத்தம் பண்ணி பாவத்திலிருந்து விடுதலை தருகிறார்: *எசே.36:25-26; எபி.10:22.*

6. தேவன் தூய்மையால் நமது இருதயங்களை நிரப்புகிறார்: *சங்.51:10; 1தெச.3:13.*

7. தேவன் நமது இருதயங்களைப் பாடல்களால் நிரப்புகிறார்: *எபே.5:19;* கொலோ.*3:16.*

8. கீழ்ப்படியவும், சேவை செய்யவும் கூடிய விருப்பத்தால் தேவன் நமது இருதயங்களை நிரப்புகிறார்: *சங்.40:8; எபே.6:5-6;* ரோமர் *6:17.*

9. தேவன் நமது இருதயங்களை ஒளியால் நிரப்புகிறார்: *எபே.1:17-19; 2கொரி.1:4-6.*

10. தேவன் கிறிஸ்துவால் நமது இருதயங்களை நிரப்புகிறார்: *எபே.3:16-19.*

தேவன் கிறிஸ்துவால் நமது இருதயங்களை நிரப்புவதை விட மேலான காரியங்கள் எதுவுமேயில்லை. அவர் நம்மில் வாசம் செய்யும்போது என்ன சந்தோஷம்! அவரோடு, அவரது வாழ்வு, அன்பு, கிருபை, வல்லமை, மனதுருக்கம், சத்தியம், பெலன், சந்தோஷம், பொறுமை, சமாதானம், நீதி, பரிசுத்தம், இரட்சிப்பு, வெற்றி, மற்றும் அவரது ஆவி அனைத்தும் நம்மோடு காணப்படுகின்றன. அவருடைய பரிபூரணத்தின் நிறைவால் நாம் நிரப்பப்படுகிறோம்.

உங்கள் முழு இருதயத்தையும் அவரிடம் கொண்டு வாருங்கள். அவரது முகத்தைத் தேடி, அவரது பிரசன்னத்திற்காகக் காத்திருங்கள். அவர் தாமே நம்மை அளவில்லாமல் வழிந்தோடும் படி நிரப்பட்டும்.

"என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும். அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர், நான் அசைக்கப்படுவதில்லை. என் இரட்சிப்பும், என் மகிமையும், என் தேவனிடத்தில் இருக்கிறது. பெலனான என் கன்மலையும், என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது. ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்" சங்.62:5-8.

". . . .ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக் கடவன். வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்" யோவா.7:37-38.

நீங்கள் ஆதியிலிருந்த அன்பை விட்டு விட்டீர்களா?

Have you lost your first love?

E.A.Johnson

'ஆதியிலிருந்த அன்பை' நீங்கள் விட்டு விட்டீர்களானால் நீங்கள் இப்போது ஆபத்தான இடத்திலிருக்கிறீர்கள். **தேவனுக்காகவும், அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காகவும் உங்களில் வாஞ்சை இருக்கிறதா?** அதிகமாக ஜெபிப்பதில் களைத்து விட்டீர்களா? தேவனுக்குரியவைகளை விட இவ்வுலகத்திற்குரியவைகள் அதிக விருப்பமுடையவைகளாயிருக்கின்றனவா?

கிறிஸ்தவர்களாயிருந்தும் ஆண்டவரை ஒரு குறிப்பிட்ட விதமாகவே நேசிக்கிறீர்கள். சபையின் பணிகளின் ஒரு பகுதியில் விறுவிறுப்புடன் செயல்படுகிறீர்கள். தேவனை விட்டுத் திடீரென பிரிந்து செல்ல முடியாது. ஏனெனில் அவரிடமிருந்து அற்புதமான ஆசீர்வாதங்களையும், அபிஷேகத்தையும் பெற்று விட்டீர்கள். சாத்தான் மிகவும் தந்திரசாலி, அவன் கிறிஸ்தவர்களை பெரிய பாவங்கள் மூலம் சோதிப்பதில்லை. அவன் சாவதானமாக நிர்விசாரமும் வெதுவெதுப்பான நிலையை இருதயத்தில் கொண்டு வந்து ஏமாற்றுவான். அதிலிருந்து அவன் தனது அழுத்தத்தை அதிகரித்துக் கிரமம் கிரமமாக தேவன் மட்டும் பார்க்கக் கூடிய இரகசிய பாவங்களுக்குள் அவனை அறியாமலே தள்ளிவிடுகிறான்.

நீங்கள் இப்போதும் வேதத்தைக் கடமைக்காகப் படிக்கிறீர்கள், ஆனால் முன்புபோல அது விலையேறப் பெற்றதாகத் தெரியவில்லை. ஜெபத்திற்காகச் செலவிடும் சமயம் குறைந்து கொண்டே வருகிறது. முன்பு போல மகிழ்ச்சியின் கீதங்கள் உங்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழும்பவில்லை. முன்பு கர்த்தரில் களிகூர்ந்து அவரைக் குறித்து பேச விரும்பிய விருப்பம் இப்போது இல்லை. அன்று ஆண்டவர் வாழ்வில் முதலிடத்திலிருந்தார், மற்றவை பின்னாக இருந்தன. லௌகீக இன்பங்கள் மீது நாட்டமே இல்லாதிருந்தது. நீங்கள் தேவனோடு நடந்து அவரோடுள்ள ஐக்கியத்தில் நடந்து வந்தீர்கள்.

ஆனால் இப்போது நீங்கள் அந்த நிலையிலில்லை. தேவனோடுள்ள உங்கள் சந்தோஷம், சமாதானம் ஆகியவை நீங்கிப் போய் விட்டன. தேவனுக்கு முன்பாக உங்கள் ஆத்தும பீடத்தில் அக்கினி எரியவில்லை.

கர்த்தரமான ஏமாற்றுகல்

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களிடமும் கூட அவன் ஒளியின் தூதனைப் போல் வருகிறான். நாம் கவனமாயிருக்க வேண்டும். அவன் சிறிதும் எதிர்பாராத முறையில் திருட்டுத்தனமாக வருகிறான். ஆண்டவர் சொன்ன உவமையில் சத்துரு நடு இரவில் வந்து களைகளை விதைத்ததை நாம் அறிவோமல்லவா? ஜமான் தூங்கிய போது யாரும் காணாத வேளையில் அவன் களைகளை விதைத்தான் மத்.13:25.

பலவேளைகளில் களங்கமற்ற ஆலோசனைகள் போல் தோன்றும் சாத்தானுடைய ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிகிறோம். வேதத்தை சற்று குறைவாக வாசிப்பது, கொஞ்ச நேரம் மட்டுமே ஜெபிப்பது போன்றவைகள் சாத்தானின் ஆலோசனைகளாகும். வேதவசனத்தை உதாசீனம் பண்ணுவது சாத்தான் செயல்பட எவ்வளவு எளிதானது என்பதை அவன் அறிவான். அவனது ஆலோசனைகள் ஒவ்வொரு நபருடைய பெலவீனங்களுக்கு ஏற்ப அளிக்கப்படுகிறது. ஆனால் இந்த சோதனைகளுக்கு நம்மை ஒப்புக் கொடாமல் சாத்தானுக்கு எதிர்த்து நிற்கக் கூடிய உயரிய அந்தஸ்துடையவர்களாய் நாமிருக்க வேண்டும்.

ஆத்தும பட்டினி

தேவ வசனத்திற்கும், ஜெபத்திற்கும் வாஞ்சை குறைவது ஆத்துமாவின் பட்டினியைக் காண்பிக்கிறது. ஆண்ட

வரின் மேலுள்ள சந்தோஷம் மறைந்து இருதயத்திலிருந்து வெளிப்படும் துதியும் ஆவியானவரின் அபிஷேகமும் எடுபட்டுப் போகின்றன. அனுதினமும் நமது ஆத்துமா வேதவசனத்தால் போஷிக்கப்பட வேண்டும். அதுவே ஆவிக்குரிய போஜனம். ஆத்துமா திருப்தியடைய வேதவசனம், ஜெபம், தேவனுக்காகக் காத்திருத்தல் ஆகியவை தேவை.

"மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்" மத்.4:4. ஆத்துமா நித்தியமானது. எனவே நித்திய பிதாவிடமிருந்துதான் ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எவ்வளவாக நாம் வேதவசனத்தை உட்கொள்ளுகிறோமோ, அதற்கு ஏற்றதாக நமது ஆத்துமா கொழுமையாகவோ, மெலிந்ததாகவோ காணப்படும். வேதவசனத்தை அதிகமாக உட்கொண்டு அதிகமாக ஜெபிப்பதால் ". . .உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்" ஏசா.55:2.

வேத வசனத்தின் ஆவிக்குரிய பசி குன்றும் போது இயற்கையாகவே லௌகீக காரியங்கள் ஆத்துமாவை நிரப்புகின்றன. எனவே யோவான் இவ்வுலகப் பொருட்களை நேசிப்பதை தவிர்க்க வேண்டுமென எச்சரிக்கிறார். "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்" 1யோவா.2:15. ஆனால் "தேவனுடைய சித்தத்தின் படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான". 1யோ.2:17 வசனத்தின்படி நாம் செய்வது விசுவாசம் செயல்படுவதற்கு இணையானது. நாம் இயேசுவை நேசித்தால் அவரது வார்த்தைகளைக் கைக்கொள்ளுவோம் யோவா.14:21-23.

அப்படியானால் நாம் எப்படி அவரது வார்த்தையை உதாசீனம் பண்ணிவிட்டு அதே வேளையில் இரட்சிப்பை உதாசீனம் பண்ணாமலிருக்க முடியுமா? எபி.2:1-3. தேவனோடுள்ள நமது நடக்கையில் கவனக் குறைவாயிருப்பது ஆபத்தானது. தேவனோடு தொடர்பின்றி இரட்சிக்கப்படுவது கூடாத காரியம். நாம் நமது நம்பிக்கையை உறுதியாக தேவன்பேரில் பற்றிப்பிடிக்கும்போது மட்டுமே நாம் கிறிஸ்துவின் பங்காளிகளாக முடியும் எபி.3:14.

இரகசிய பாவங்கள்

ஒரு கிறிஸ்தவன் தேவ வசனத்தில் வாஞ்சையற்று, ஜெய வாழ்க்கை வாழாமலிருக்கும்போது சாத்தான் திரளான இரகசிய பாவங்களை உள்ளத்தில் கொண்டு வருகிறான். பகைமை, சுயநலம், வெறுப்பு, கசப்பு, பொறாமை, தீய எண்ணங்கள், பெருமை, இரக்கமின்மை, போன்றவை இரகசிய பாவங்களாகும். தேவன் மட்டுமே இவற்றைப் பார்க்கிறார். இவை மனிதனைக் கெடுக்கும் என்று இயேசு கூறினார் மத்.15:18. இவைகளை மனிதன் கண்களால் காண முடிவதில்லை. இருதய நோயுற்ற மனிதனின் வேதனை பிறருக்குத் தெரிவதில்லை. வெளியே பார்க்க அவன் நன்றாக இருக்கலாம். ஆனால் திடீரென அது அதிகரிக்கும் போது பிறர் அவனை வியாதியுள்ளவனாக காண்கிறார்கள்.

இதே போலவே ஆதி அன்பை விட்ட மனிதனும் காணப்படுகிறான். வேதவசன வாஞ்சை, ஜெபிக்கும் தாகம் இவை அற்றுப் போனது அவனுக்குத் தெரியும். இந்த நேரத்தில் சாத்தான் இதை பயன்படுத்திக் கொண்டு அவனுக்குள்ளே தீமையான உணர்வுகளைக் கொண்டு வருகிறான். இதுவே அவனுடைய இதயத்தின் ஆவிக்குரிய நிலை. இந்த இரகசிய பாவங்கள், வேர் விட்டு, முளைத்து, தீய வார்த்தைகள், செயல்கள் மூலம் வெளிப்படும்போதுதான் அவனது நிலை வெளிப்படும்.

ஆதி அன்பை இழந்த சிலர் தங்களுக்கே திருப்தியான ஒரு வாழ்வை நடத்தலாம். ஆலயத்தில் நன்கு செயல் படலாம். அவர்கள் ஆண்டவருக்காக சாட்சியாக வாழ விரும்பினாலும் பிறர் தாக்கமடைவதில்லை. ஏனெனில் தேவ ஆவியானவரின் அபிஷேகம் அவர்களில் இல்லை.

மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்ய வேண்டும்

ஆதியில் இருந்த அன்பை விட்டு விட்டவர்கள் ஆபத்தான நிலையிலிருக்கிறார்கள். அவர்கள் நல்லவர்களாயிருந்து, நற்கிரியைகளைச் செய்தாலும் தேவன் அவர்களில் பிரியப்படுவதில்லை. ஆண்டவர் முதல் முதலாக நமது அன்பையே எதிர்பார்க்கிறார். தொடர்ந்து நாமாகவே நமது விசுவாசத்தை செயல்கள் மூலமாகக் காண்பிக்க முடியும். *(வெளி.2: 2-5 வசனங்கள் வாசிக்க)*

ஆவிக்குரிய இருதய வியாதி குணமடைய மனந்திரும்புதலும், தேவனுக்கு நேராகத் திரும்புவதும் அவசியம். பாவம் செய்த தூதர்களையே விட்டு விடாத தேவன், இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருப்பவர்களுக்குத் தண்டனையளிப்பது அதிக நிச்சயமல்லவா!

நாம் அந்தரங்க அறையில் உட்கார்ந்து தேவனுடைய விலையேறப் பெற்ற வார்த்தையை அனுதினமும் உட்கொள்வோம். தனியாக ஆண்டவரோடு உறவாடுவோம். இப்படிச் செய்வதால் மட்டுமே நாம் தேவனோடுள்ள சமாதானத்தையும், ஐக்கியத்தையும் மறுபடியும் பெற்றுக் கொள்ள முடியும்.

"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ, அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல் என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்" வெளி.3:5

மருத்துவ வள்ளத்திலிருந்து கொள்ளையரின் குகை வரை பகுதி – 3

From hospital boat to Robber's den (Part - 3)

Oswald J.Smith

பயங்கர ரூபம் கொண்ட கொள்ளையர் தலைவன் ஜாஃப்ரே அருகில் வந்து தட்டெழுத்து எந்திரத்தைக் காட்டி 'இது என்ன?' என்று கேட்டான். ஜாஃப்ரே அவனை அருகில் கண்டு திடுக்கிட்டார். அவன் அதைக் கையிலெடுத்துக் கொண்டு மறுபடியும் 'இது என்ன?' என்று கேட்டான். 'அது எனது தட்டெழுத்து எந்திரம்' என பதிலளித்தார். இது என்ன வேலை செய்யும் என்று அவன் கேட்க அவர் 'எழுத்துக்களை எழுதும்' என்றார். உடனே அவன் சீன எழுத்துக்கள் தெரியுமா எனக் கேட்டான். தெரியாது என பதில் வரவே இதைத் திறந்து காட்டு என்றான். அவரும் திறந்து காண்பித்தார். கவனமாக தான் அங்கு ஒளித்து வைத்திருந்த கைக்கடிகாரத்தைக் காணாதபடி மூடி வைத்தார். 'இது எனக்கு பயன்படாது, நீயே வைத்துக் கொள்' என்று கூறி கடந்து சென்றான்.

அவன் சென்ற சில வினாடிகளில் அவர் விரைவாக அதனைத் திறந்து அங்கிருந்த கைக்கடிகாரத்தை எடுத்து சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்டார்.

அவர்கள் இளைப்பாறும் இடத்திற்கு வந்து ஒரு மணி நேரத்தில் தலைவன் கட்டளை கொடுக்க ஒவ்வொரு வரும் புறப்பட ஆயத்தமாயினர்.

ஆபத்தான பாதை

இதுவரை கைதிகளில் ஒருவரும் பிரயாணம் பண்ணியிராத எதிர்பாராத பயணத்தை அவர்கள் மேற்கொண்டனர். பாதை மிகவும் இருட்டாயிருந்தது. கற்கள், மரங்கள், செழி, தண்ணீர் போன்றவை சூழ்ந்து காணப்பட்டன. பாதை தெரியாத மங்கலான நிலை. சரீரங்களில் களைப்பு பயங்கரமான அனுபவம்.

அப்போது ஒரு சிறிய நீரோடையை அடைந்தனர். அது ஆழமற்ற தாயிருந்தது. காலை நனைக்க விரும்பாத ஜாஃப்ரே அங்கு காணப்பட்ட கற்கள் மீது தாவி கடந்து சென்றார். கள்வர்களோ தண்ணீருக்குள்ளேயே நடந்தனர். ஜாஃப்ரேக்கு அது ஆச்சரியமாயிருந்தது. அவர்கள் தங்கள் பிரயாணத்தை முடிப்பதற்கு முன்பாக இத்தகைய 13 நீரோடைகளைக் கடந்தார்கள். சில நீரோடைகளில் தோள்வரை தண்ணீர் இருந்தபடியால் நீருக்குள் நடக்க வேண்டியதாயிற்று.

பின்பு வந்த பாதை இதைவிடக் கடினமாயிருந்தது. ஜாஃப்ரே சீனா முழுவதிலும் இத்தகைய கடின பாதையைக் கண்டதில்லை. நடக்கவும் ஏறவும் முடியாத மலைப்பாங்கான, வெடிப்பான பகுதிகளை அவர்கள் கடந்து சென்றனர்.

குற்றுச் செடிகளையும், மரங்களையும் பற்றிக் கொண்டு கைகளாலும் முழங்கால் களாலும் கடந்து சென்றனர். தொடர்ந்து பயங்கரமான ஒடுங்கியதும் வளைந்து செல்லுவதுமான பாதைகள் காணப் பட்டன. ஒரு அடி தவறாக வைத்தாலும் நூற்றுக்கணக்கான அடிகள் பாதாளத் தில் விழ வேண்டியது தான். கைதிகள் தப்பிப்போகக் கூடாது என்பதற்காகவே இப்படிப்பட்ட பாதையைக் கள்வர்கள் பயன்படுத்தினர்.

இறுதியாக காலை ஒளி இலே சாக வரத் தொடங்கியதும் தலைவன் எல்லோரையும் நிற்கச் சொன்னான். அப்போது மணி 5 மறுபடியும் இளைப் பாறினர். சூரியனும் உதித்து மறைந்தது. நாள் முழுதும் அங்கேயே தங்கியிருந் தனர். இரவு வந்ததும் பிரயாணம் ஆரம்பித்தது.

பனிரெண்டு மணி நேரங்கள் தொடர்ந்து பயணித்தனர். மிஷனெரி கள் மிகவும் களைத்துப் போயினர். ஜாஃப்ரே கால்களை இழுத்துக் கொண்டே நடந்தார். இறுதியாக காவலாளியிடம் ஒன்று கேட்டார்.

"இனி நீங்கள் என்னைத் தூக்கித் தான் செல்ல வேண்டியிருக்கும்" என்றார். அவரால் நடக்க முடியவில்லை. காவலா ளியோ சிரித்துக் கொண்டே 'பன்றிகளை சுமப்பது எப்படி என்று தெரியுமா?' எனக் கேட்டான். 'எனக்கு நன்றாகத் தெரியும். நான்கு கால்களையும் இரண்டி ரண்டாகக் கட்டி ஒரு தடியில் இணைத்து இருவர் சுமப்பார்கள்' என் றார். அவன் 'அப்படித்தான் உம்மையும் சுமப்போம்' என்றான் காவலாளி. இந்த நிலையை விரும்பாத ஜாஃப்ரே மெது வாக நகர ஆரம்பித்தார்.

கள்வர் குகையை அடைதல்

சில மணி நேரங்களுக்குப் பிறகு பாதை ஒரு ஆழமான ஓரத்தை சுற்றி வந்தது. அது ஆழமாகவும், கருமை யாகவும், செங்குத்தாகவுமிருந்தது. கள்வர்களும் கூட மிக கவனமாக நடக்க வேண்டிய பாதையாயிருந்தது. ஒவ்வொரு வருக்கும் ஒரு மூங்கில் கம்பு கொடுக்கப் பட்டது. அதன் உதவியால் நடக்க வேண்டியதாயிருந்தது.

கடைசியாக ஒரு கைதி சற்றும் நடக்க முடியாமல் குளிர்ந்த ஈரமான தரையில் படுத்து விட்டான். அவனது காவலர்கள் அவன் எழும்பும் வரை அவனன்டையில் நின்றனர்.

ஜாஃப்ரே புண்பட்ட கால்க ளைக் குறித்து அறிந்திருந்தார். அது மிஷனெரிகளுக்கு சர்வ சாதாரணம். அவர் கிராமங்களை சுற்றி வந்த நாட் களில் கால்கள் வீங்கி புண்கள் வந்த துண்டு. ஆனால் இந்தப் பிரயாணத்தில் எந்த விதமான கொப்புளங்களும் ஏற் படவில்லை. தேவன் அவரைப் பாதுகாத் ததே காரணம்.

அதிகாலையில் மலையின் உச்சியை அடைந்தனர். ஒரு சிறு இறக்கத்தில் ஒரு மூலையில் திரும்பிய போது கள்வர்களின் குகை காணப் பட்டது.

ஜாஃப்ரே திகைப்புடன் சுற்றி லும் பார்த்தார். அந்த இருண்ட குகைக் குள் பெண்களும், ஆண்களும் சிதறிக் கிடந்தனர். அவர்கள் முகங்கள் கடின மாகவும் கண்கள் குரூரமாகவுமிருந்தன. அவர்கள் பாவத்தின் சின்னங்களாய் தோற்றமளித்தனர். குற்றம் செய்வதே அவர்கள் தெரிந்தெடுத்த தொழில். 13 முதல் 16 வயது வரையுள்ள பெண் பிள்ளைகளும் அங்கு காணப்பட்டனர். அவர்கள் கடத்தப்பட்டு கொண்டு வரப்பட்டவர்கள். இவற்றைக் கண்டு மிஷனெரி திடுக்கிட்டார்.

படுப்பதற்கான எந்த வசதியு மில்லை. எவ்வளவோ களைப்புடனிருந்த அவர்கள் இளைப்பாற முடியவில்லை. மனிதர் இத்தனை கேடான நிலையிலி ருப்பது ஜாஃப்ரேக்கு ஆச்சரியத்தை அளித்தது. அந்தக் காட்சிகளை விவரிக்க வார்த்தைகளில்லை.

"தேவ கிருபை இம்மக்களை சந்தித்து இரட்சிக்க முடியும். தேவனால் கூடாதது ஒன்றுமில்லையே" என்று எண்ணினார். மேலும் 'இந்த மக்களுக் கும் ஆத்துமா உண்டே! இவர்களுக்கா கவும் கிறிஸ்து மரித்தாரே' என்று தனக் குள்ளே பேசிக்கொண்டார்.

ஒரு மூலையில் கட்டப்படா மலேயே ஒதுங்கும்படி கட்டளை கொடுக்கப்பட்டது. ஆயினும் எவரும் அசையவில்லை. தாகத்திற்காகக் கூட இரவோ பகலோ உத்தரவின்றி அசைய முடியாது.

'நாம் அவர்களுடைய கைதி களல்ல', என்று ஜாஃப்ரே தனது உடன் மிஷனெரிகளை தைரியப்படுத்தினார் 'நாம் இயேசுவின் கைதிகள்'.

தொடரும்

ஆண்டவரே, இறங்கி வாரும்! நாங்கள் உம்மை சந்திப்போம்

Come down, Lord! we will meet you

Roger Ells worth

பாடப்பகுதி:- ஏசாயா 64:5

"மகிழ்ச்சியாய் நீதியைச் செய் கிறவர்களையும், உம்முடைய வழிக ளில் உம்மை நினைக்கிறவர்களையும் சந்திக்கிறீர், நாங்களோ அவைகளுக்கு விரோதமாக எப்பொழுதும் பாவஞ் செய்தபடியினாலே தேவரீர் கடுங் கோபம் கொண்டீர்; இன்னமும் தப்பி யிருக்கிறோம்".

இப்பாடபகுதி தேவனோடுள்ள சந்திப்பைக் குறித்துப் பேசுகிறது. இது ஒரு விசேஷித்த சந்திப்பு. இந்த சந்திப்பு தோழமை, புரிந்து கொள்ளுதல், ஆறுதல் ஆகியவற்றைத் திருப்தியுடன் அளிக் கிறது.

நாம் தேவனை சந்திக்க சில நிபந்தனைகளை மனதிற் கொள்ள வேண் டும். அவைகளைக் கீழே காண்போம்.

நீதி தேவையாயிருக்கிறது

இத்தேவையை சந்திக்க இரு காரியங்கள் இதில் அடங்கியுள்ளன. முதலாவது நாம் நீதியில் மகிழ வேண் டும். இரண்டாவதாக நீதியைப் பயிற் சிக்க வேண்டும். இவற்றை செய்யு முன்னால் இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நீதியைக் குறித்த விவாதம் மக்களை துரிதமாக தூரப்படுத்துகிறது. நமது சமுதாயம் சரியானதும் தவறான தும் இருக்கின்றன என்பதை இலகுவாக எடுத்துக் கொள்கிறது. சரியா தவறா என தீர்மானிப்பது அந்தந்த நபர்களைப் பொறுத்தது. ஒருவர் சரி என்பதை இன்னொருவர் தவறு என்று சொல்லும் காலத்தில் வாழுகிறோம்.

ஆயினும் நீதி என்று சொல்லும் போது சிலர் அதில் களிகூர ஆயத்தமா யிருக்கிறார்கள். எத்தனை கிறிஸ்த வர்கள் தாங்கள் நீதியில் களிகூருவதாகக் கூற முடியும்? தாவீது 119-ம் சங்கீதத்தில் "திரளான செல்வத்தில் களிகூருவது போல, நான் உமது சாட்சிகளின் வழி யில் களிகூருகிறேன்... ஆதலால் நான் பொன்னிலும் பசும் பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப் படுகிறேன். எல்லாவற்றைப்பற்றியும், நீர் அருளின எல்லாக் கட்டளைகளும் செம்மை யென்று எண்ணி, சகல பொய் வழிகளையும் வெறுக்கிறேன்" சங்.119: 14,127,128 என்கிறார்.

இப்படிச் சொல்ல நம்மில் பலர் ஏன் தயக்கம் காண்பிக்கிறோம். தாவீ தைப் போல ஏன் உலக ஐசுவரியங் களுக்கு மேலாக அவரது கட்டளை களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வில்லை? எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்கிறேன் என்று ஏன் உங்களால் சொல்ல முடியவில்லை.

தேவனைப் பற்றியும் அவரது பிரமாணங்களையும் பற்றி தவறான புரிந்து கொள்ளுதலுடனிருப்பதே காரணம். தேவன் நமது சந்தோஷத்தை கெடுக்கிறவர் என்று எண்ணிக் கொண் டிருக்கிறோம். தேவனுடைய கற்பனை கள் முழுமையானவைகளும், நல்லவை களும் என்று ஏற்றுக் கொள்ள முடியாம லிருக்கிறோம். அவை சந்தோஷத்தைக் கெடுப்பவை என்று எண்ணுகிறோம். நீங்கள் தேவ கட்டளைகளுக்கு எதிர்த்து நின்றால் அதின் கொடிய விளைவுகளை சந்திக்க வேண் டியதாயிருக்கும். மாட் றாய்டென் என்பவர் "நீங்கள் பத்துக் கற்பனைகளை உடைக்க முடியாது, நீங்கள் அவற்றிற்கு எதிராக உங்க ளையே உடைக்க வேண்டியதாகும்" என்று குறிப்பிடுகிறார்.

நமது தப்பெண்ணங்களிலி ருந்து விடுபட்டு உண்மையாகக் களிகூர்ந்து நீதியைச் செய்ய தேவனை நேசிக்க வேண்டும். 1யோ.5:3-ல் "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுவதே அவரிடத்தில் அன்பு

(7-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் இதில் பதிவு செய்யப்பட்டதை வாசிக்கலாம். இதை இயக்குவதற்கு மிகச் சிறிய லித்தியம் பேட்டரியையும் இணைத்து Bio Chips என்ற உலோக மாத்திரைக்குள் அடக்கி வைத்து விடுகிறார்கள். இந்த பேட்டரி மனித உடலிலுள்ள வெப்பத்தின் மூலம் ரீசார்ஜ் ஆகிக் கொண்டே இருக்கும். இந்த Bio Chip அளவு, ஒரு அரிசியின் அளவுதான். ஒரு அரிசி அளவுள்ள இதை உடலில் பதித்து விட்டால் மேலே கூறப்பட்ட எந்தப் பிரச்சனையும் ஏற்படாது. அதாவது இது தொலைந்து விடாது. யாரும் திருட முடியாது. தவறானவர்கள் பயன் படுத்த வழி இல்லை.

உடலில் எந்த இடத்தில் இதைப் பதிப்பது?

இந்த Bio Chips-ஐ உடலில் எந்த இடத்தில் பதிய வைப்பது பொருத்தமாக இருக்கும் என ஆராய நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. இதற்காக சுமார் 1.5 மில்லியன் டாலர் செலவானது (சுமார் 7 கோடி ரூபாய்). ஆய்வின் முடிவில் கண்டு பிடித்தது என்ன? உடலில் இரண்டு இடம் இதை வைக்க பொருத்தமானது என்று முடிவு செய்யப்பட்டது.

1. நெற்றி
2. வலது கையின் வெளிப்புறம்

இது வேதாகமத்தை நம்புகிறவர்களுக்கு பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது. காரணமென்ன? 2000 ஆண்டுகளுக்கு முன்பே இது முன்னறிவிக்கப் பட்டுள்ளது.

நெற்றியிலோ, வலது கையிலோ பதித்து விட்டால் இதை யாரும் எடுக்க முடியாது. அப்படியே யாரும் அறுவைச் சிகிச்சை மூலம் அகற்ற முயன்றால் Bio Chips உலோக மாத்திரை உடைந்து விடும். அதிலிருந்து வெளியேறும் ரசாயனப் பொருள் சம்பந்தப்பட்டவர்களின் உடலில் பாதிப்பை உண்டுபண்ணும். அதிலிருந்து வெளியேறும் மைக்ரோ அலை மூலம் மத்திய அலுவலகத்திற்கு (GPS - Global Positioning System) தானாய் செய்தி சென்றடையும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள்.

அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலது கைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாத படிக்கும் செய்தது.

இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக் கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது. அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு (வெளி.13:16-18).

பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்ற சத்தியத்தை உறுதிப் படுத்தும் உண்மைகளில் இதுவும் ஒன்று. இன்று நடக்கும் காரியத்தைக் குறித்து 2000 ஆண்டுகளுக்கு முன் யாராவது யூகித்து எழுத முடியுமா? இதை வாசிக்கும் நீங்கள் பரிசுத்த வேதாகமம் கூறும் சத்தியங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க உங்களை ஒப்புக் கொடுங்கள்.

Mondex Smart Card

இந்த Bio Chip (உலோக மாத்திரை) என்ற சிறிய எலக்ட்ரானிக் கருவியை Mondex Smart Card என்ற நிறுவனத் திற்காக மோட்டரோலா (Motorola)என்ற கம்பெனி தயாரிக்கிறது.

இதை பயன்படுத்தும் நாடுகளில் சில

Mondex என்ற இந்த நிறுவனத்தின் பிரதிநிதிகளாக 20 நாடுகளில் 250-க்கும் அதிகமான கம்பெனிகள் உலகமெங்கும் இதை விற்பனை செய்து வருகின்றன. இவற்றைப் பயன்படுத்தும் நாடுகளில் சில பிரிட்டன், கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, மாகாவு, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா, தைவான், இலங்கை, கோஸ்டாரிக்கா, குவாட்டமாலா, நிகரகுவா, பனாமா, ஹோண்டுராஸ், எல்சால் சடார், பிரேசில்.

இந்த Mondex கம்பெனியின் பங்குகளில் 51 சதவீத பங்குகளை மாஸ்டர் கார்ட் நிறுவனம் வாங்கியுள்ளது. கடந்த ஒரு வருடமாக இந்த Bio Chips விற்பனையில் உள்ளது. Mondex நிறுவனத்தால் வருடத்திற்கு 100 கோடி 'Bio Chips' உற்பத்தி செய்யப்படுகிறது.

Mondex பணம் உன் கையில் என்று பொருள்.

MON - MONETARY

DEX - DEXTER RIGHT HAND SIDE

இந்த எலக்ட்ரானிக் அடையாளத்தை தன் உடலில் தரித்தவன் மிருகம் என்று கூறப்பட்டுள்ள அந்திகிறிஸ்துவின் அடையாளத்தை தன் உடலில் பெற்ற வன் என்று பொருள். இந்த அடையாளத்தை உடலில் பெற்ற ஒருவரும் பரலோகம் செல்ல மாட்டார்கள்.

××××××××××

22-07-2017 சனிக்கிழமை நடைபெற்ற உபவாச ஜெபத்தை மிகக் குறுகிய காலத்தில் பாஸ்டர் **M.பன்னீர் செல்வம்** அவர்கள் நேர்த்தியாக ஒழுங்கு செய்திருந்தார்கள். கர்த்தர் கிருபையாய் உபவாச ஜெபத்தை ஆசீர்வதித்தார். போதகருக்காகவும், குடும்பத்தினருக்காகவும், சபை விசுவாசிகளுக்காகவும், இதனை ஒழுங்கு செய்ய உதவிச் செய்த நண்பர்களுக்காகவும் கர்த்தரை அதிகமாய் துதிக்கிறோம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

அலுவலக மொபைல் : 95432 21008
: 94897 40295
அலுவலக போன் : 04652 403295

10.00 - 1.00; 2.00 - 6.00

செப்டம்பர் மாத உபவாச ஜெபம்

Heart Cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக இதய கதறல்-2017

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : 16-09-2017
3-வது சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

இடம் : இயேசு நம்மோடு சபை கருங்கல்,

தொடர்பு : பாஸ்டர் P.**ஜெயந்தராஜ்,** கருங்கல்
மொபைல் : 9443174325

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளல்ல" என்று படிக்கிறோம்.

கிறிஸ்தவர்கள் ஆண்டவரை நேசிக்கவில்லையா? நேசிக்கிறார்கள், ஆனால் அது பூரண அன்பல்ல. அது தேய்ந்து போய்க் கொண்டிருப்பதால் அன்பு இருப்பதே தெரிவதில்லை. எபேசு சபையினரைக் குறித்து கிறிஸ்துவின் பராது, அவர்கள் ஆதியிலிருந்த அன்பை விட்டு விட்டதே வெளி.2:5. அவர்களிடம் அன்பு இருந்தது, ஆனால் அது, வாஞ்சை நிறைந்ததும், அனலுள்ள துமாய் முந்தி இருந்தது போல இருக்க வில்லை.

நாம் நீதியை பழகுவதற்கு முன்பு அதில் களிகூர வேண்டும். அதில் களிகூருவதற்கு முன்பாக அதை எதிர் பார்க்கும் ஆண்டவரில் அன்பு கூர வேண்டும். தேவனை நேசிக்க வேண்டிய விதமாக நேசிக்கிறோமா?

ஞாபகப்படுத்தும் தேவை

ஏசாயா தேவனிடம் ". . . . நீதியைச் செய்கிறவர்களையும், உம்முடைய வழிகளில் உம்மை நினைக்கிறவர்களையும் சந்திக்கிறீர்" என்கிறார். இதில் 'நினைக்கிறவர்கள்' என்ற பதம் முக்கியமானது. இது நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய பகுதி. தேவனை சந்தித்து அவரது பிரசன்னத்தை அனுபவிக்க கருத்தோடு அவரை தேடுவது அவசியம். அலெக்ஸாண்டர் மாக்லேரன் என்பவர், "நம்மை வெளியே இழுத்துச் செல்ல நம்மில் ஏராளமான காரியங்கள் உள்ளன. அவை கடமைகள், சந்தோஷம், துக்கம், போன்றவைகளாகும். இவை நம் இருதயத்தில் இடம் பெற்று தொடர்ந்து எண்ணங்களிலும் கலந்து விடுகின்றன. எனவே மனப்பூர்வமான முயற்சி அடிக்கடி எடுப்பதால் தூரத்திலிருக்கும் மலையுச்சியைப் பார்க்க முடியும். நீங்கள் நினைவுகூர முயற்சிக்காவிடில் நிச்சயமாக மறந்து விடுவீர்கள்".

முயற்சியை அடிக்கடி செய்வதால் நினைவுகூருவதற்கும் ஆண்டவரின் மேலுள்ள அன்பை ஆழப்

படுத்துவதற்கும் ஏதுவாயிருக்கிறது. நாம் நினைவு கூருதலையும் முயற்சியையும் இணைப்பதில்லை. நாம் ஞாபகத்தை உருவாக்கப் பொறுப்புள்ளவர்கள். எனது ஞாபக சக்தி குறைவானது என்று சாக்குப்போக்கு சொல்வது நல்லதல்ல.

எபேசு சபையார் ஆதி அன்பை விட்ட பின்பு அவர்களைக் குறித்து, "ஆகையால் நீ என்ன நிலையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து. . . ." எனவே நினைப்பதும், ஞாபகத்தில் வைப்பதும் முக்கியமானவை என அழுத்தப்படுகிறது.

இன்று நாம் ஆண்டவரை சந்திக்காமலிருப்பதும் அவரது வல்லமை, நடத்துதல் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளாமலிருப்பதும் ஏனென்றால் தேவையான முயற்சியைச் செய்ய நாம் விருப்பமற்றிருக்கிறோம். இரட்சிக்கப்பட முயற்சி தேவையில்லை, ஏனென்றால் கிருபையினாலே . . . கிரியைகளாலல்ல நாம் இரட்சிக்கப்பட்டது எபே.2:8-9. கிறிஸ்தவ வாழ்வு வாழ முயற்சி வேண்டும்.

நாம் எதை நினைக்க வேண்டும்? தேவனை அவருடைய 'வழிகளை' நினைக்கும்படி ஏசாயா கூறுகிறார். இந்த வார்த்தைகள் நாம் ஏற்கெனவே தேவனுடைய அறிவை பெற்றவர்கள் என்றும் அவர் நமது இருதயங்களில் கிரியை செய்கிறார் என்பதையும் காண்பிக்கிறது. அனைத்து தேவ பிள்ளைகளும் அவர்களது கடந்த கால வாழ்வில் தேவன் அவர்களோடிருந்ததற்கு சான்று உண்டு. அடிக்கடி பின்மாறுவதுமுண்டு. எனவே தேவனை சந்திக்க நீங்கள் விரும்பினால் முற்காலத்தை எண்ணிப் பாருங்கள். உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை சரித்திரத்தைத் திரும்பிப் பாருங்கள்.

யாக்கோபு தேவனை முதலாவது பெத்தேலில் சந்தித்தான். அங்கே தேவனோடு ஐக்கியம் கொள்ள முடியும் என்று கண்டு கொண்டான். வானந்திறந்திருப்பதையும் ஒரு ஏணி வானத்திலிருந்து பூமியை எட்டும்படியாக வைக்கப்பட்டிருப்பதையும் கனவில் கண்டான்.

வானம் திறக்கப்பட்டிருந்தது. எனவே தேவனோடு உறவு கொள்ள முடியும் என்பது தெளிவாயிற்று. அங்கு ஆண்டவருக்காகதான் வாழுவேன் என்று தீர்மானம் செய்தான்.

வருடங்கள் கடந்தன. இதற்கிடையில் பல சம்பவங்கள் நிகழ்ந்தன. இறுதியாக தேவன் யாக்கோபுடனே பேசினார். "நீ எழுந்து பெத்தேலுக்குப் போய் அங்கே. . . . ஒரு பலிபீடத்தை உண்டாக்கு" ஆதி.35:1.

நீங்கள் ஆண்டவரை உங்கள் இரட்சகராக அறிவீர்களானால் உங்கள் கடந்த காலத்தில் ஒரு பெத்தேலின் அனுபவம் உண்டு. அதனை எண்ணிப் பாருங்கள். நீங்கள் முதலாவது கர்த்தரைக் கண்ட சமயத்தை மனதில் கொண்டு வாருங்கள். அது உங்களுக்கும் தேவனுக்குமிடையில் ஒரு வாய்க்காலை ஏற்படுத்தும். அந்த நேரத்தில் நீங்கள் உணர்ந்த அன்பை சிந்தித்துப் பாருங்கள். அப்போது வாய்க்காலிலுள்ள அழுக்குகளெல்லாம் மறைந்து போகும்.

நீங்கள் தேவனோடு நடக்கவில்லையென்றால், அதற்கு காரணம் அவர் செயல்படாதது அல்ல. அவர் எப்போதும் நீதியின் பாதையில் நடந்து கொண்டுதானிருக்கிறார். நீங்களும் மகிழ்ச்சியுடன் நீதியைப் பின்பற்றி முன்பு அவரோடிருந்த ஐக்கியத்தின் இனிமையை நினைவுபடுத்தலாம். ". . . நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டு விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டு விடுவார்". 2நாளா.15:2

பத்திரிகை செய்திகள்

ஜூன் மாத இறுதி நிலவரம்

தொலைபேசி இணைப்புகள் 121 கோடியை தாண்டியது

ஆகஸ்ட் 16

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புது டெல்லி

இந்தியாவில், ஜூன் மாத இறுதியில் தொலைபேசி இணைப்புகளின் (லேண்டுலைன்+ செல்போன்) மொத்த எண்ணிக்கை 121 கோடியை தாண்டி உள்ளது. தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் (டிராய்) இத்தகவலை வெளியிட்டுள்ளது.

புள்ளி விவரங்கள்

டிராய் அமைப்பு தற்போது வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் வருமாறு:-

கடந்த ஜூன் மாதத்தில் தொலைபேசி இணைப்புகளின் எண்ணிக்கை 121.08 கோடியாக அதிகரித்துள்ளது. மே மாத இறுதியில் அது 120.50 கோடியாக இருந்தது. இதில், செல்போன் இணைப்புகள் 118.60 கோடியாக இருக்கிறது. மே மாதத்தில் அது 118 கோடியாக இருந்தது.

ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் அதிகபட்சமாக 60 லட்சம் புதிய இணைப்புகளை வழங்கி முன்னிலையில் உள்ளது. மே மாதத்தில் இந்நிறுவனம் 47 லட்சம் இணைப்புகளை வழங்கி இருந்தது. அடுத்து பார்தி ஏர்டெல் 20.47 லட்சம் புதிய இணைப்புகளையும், பொதுத்துறையை சேர்ந்த பீ.எஸ்.என்.எல் 9.95 லட்சம் இணைப்புகளையும் வழங்கி உள்ளன. வோடா போன் மற்றும் ஐடியா செல்லுலார் முறையே 9.88 லட்சம் மற்றும் 35,541 புதிய இணைப்புகளை வழங்கி உள்ளன.

இந்நிலையில், டாட்டா டெலி சர்வீசஸ் நிறுவனம் 17.25 லட்சம் செல்போன் வாடிக்கையாளர்களை இழந்து இருக்கிறது. அடுத்து ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் 10 லட்சம் வாடிக்கையாளர்களை இழந்துள்ளது. டெலிநார் 6.82 லட்சம் இணைப்புகளையும், ஏர்செல்4.10 லட்சம் இணைப்புகளையும் இழந்துள்ளன. சிஸ்டெமா ஷியாம் 2.48 லட்சம் வாடிக்கையாளர்களை இழந்திருக்கிறது. பொதுத்துறை நிறுவனமான எம்.டி. என்.எல். 250 வாடிக்கையாளர்களை இழந்து இருக்கிறது.

லேண்டு லைன்

ஜூன் மாதத்தில் ஒட்டு மொத்த அளவில் 102.27 கோடி செல்போன் இணைப்புகள் மட்டும் தொடர் பயன்பாட்டில் இருக்கின்றன. அம்மாதத்தில் லேண்டு லைன் இணைப்புகளின் எண்ணிக்கை 2.40 கோடியாக குறைந்துள்ளது. மே மாதத்தில் அது 2.41 கோடியாக இருந்தது.

இந்த பிரிவை பொறுத்தவரை பீ.எஸ்.என்.எல். நிறுவனம் 1.50 லட்சம் வாடிக்கையாளர்களை இழந்துள்ளது. அடுத்து எம்.டி.என்.எல் (10,438), ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் (3,690), சிஸ்டெமா ஷியாம் (1,397) ஆகிய நிறுவனங்கள் அதிக வாடிக்கையாளர்களை இழந்துள்ளன. அதே சமயம் பார்தி ஏர்டெல் வோடாபோன், குவாட்ரன்ட், டாட்டா ஆகிய நிறுவனங்கள் இணைந்து சுமார் 15,000 புதிய லேன்டுலைன் இணைப்புகளை வழங்கி இருக்கின்றன.

அகன்ற அலைவரிசை

ஜூன் மாதத்தில் கம்பியில்லா அகன்ற அலைவரிசை இணைப்புகளின் எண்ணிக்கை (29.16 கோடியில் இருந்து) 30 கோடியாக உயர்ந்துள்ளது. ஒட்டுமொத்த அகன்ற அலைவரிசை இணைப்புகளில் ஐந்து முன்னணி நிறுவனங்களின் பங்கு 89.08 சதவீதமாக இருக்கிறது. இதில், ரிலையன்ஸ் ஜியோ மொத்தம் 12.33 கோடி இணைப்புகளுடன் முதலிடத்தில் இருக்கிறது. அடுத்து பார்தி ஏர்டெல் (5.53 கோடி) வோடாபோன் (4.11 கோடி) ஐடியா செல்லுலார் (2.64 கோடி), பீ.எஸ்.என்.எல். (2.17 கோடி) ஆகிய நிறுவனங்கள் இருக்கின்றன.

தினத்தந்தி

Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67
Postal Reg. No. KKI/63/2015-2017
Date of Publication : 27th of Every month
Date of Posting : 27th & 28th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To